**செ. கு. எண்**: 300 **நாள்**:23.08.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 23.8.2012

விழுப்புரம் மாவட்ட ஆயுதப்படைப் பிரிவில் இரண்டாம் நிலை காவலராகப் பணி புரிந்து வந்த திரு. B.வரதராஜன் அவர்கள் 14.8.2012 அன்று கோபாலபுரம் அருகே புலியனூர் - தீவனூர் சாலையில் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 21.8.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், சுப்பிரமணியபுரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A,முத்துப்பாண்டி அவர்கள் உடல்நலக் குறைவால் 22.8.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை தலைமைக் காவலர் திரு. முத்துப்பாண்டி மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் திரு. வரதராஜன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், உடல்நலக் குறைவால் காலமான தலைமைக் காவலர் திரு. முத்துப்பாண்டி, சாலை விபத்தில் காலமான இரண்டாம் நிலைக் காவலர் திரு. வரதராஜன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**

தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**